1975 எப்ரல் 7]

ஆனால், இன்றைக்கு பல அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக அகற்றுவதற்கு நம்முடைய அரசு விரைவில் உத்தரவு அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டதென்பது உண்மை. ஆகவேதான் இதிலே எல்லா அலுவலர்களுக்கும் பொதுவான வகையில் திருவள்ளுவர் படங்கள் அமைக்கப்படவேண்டும் என்கின்ற கருத்தை இந்த அரசு ஆணையாகப் பிறப்பித்திருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் வைக்கப்படும் வள்ளுவப் பெருந்தகையின் படத்திற்குக் கீழே அவருடைய குறள் வாசகங்கள் ஏதாவது எழுதப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது பயணிகள் விடுதியில் வைக்கப்படுகிற படங்களில்,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

என்கின்ற குறள்மொழி எழுதப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எல்லா அரசுக் காரியாலயங்களிலும் உள்ள கடவுள் படங்களை அகற்றுமாறு அண்ணா அவர்கள் உத்தர விட்டார்கள் என்று கூறினார்கள். அப்படியானால், நாம் அற நிலையத் துறையை வைத்துக்கொண்டு நிர்வகிக்கிறோமே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வள்ளுவர் படத்தைப் பொறுத்த வரையில் கேளுங்கள். அற நிலையங்களுக்கெல்லாம் போகாதீர்கள்.

திரு. எம். சுரேந்திரன்: கோயில்களெல்லாம் அறநிலையத் துறையின் கீழ் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயில், குளங்களைப்பற்றி யெல்லாம் இதில் கேட்காதீர்கள். அறநிலையத் துறைக்கும் போக வேண்டாம். வள்ளுவர் படத்தைப் பொறுத்து மட்டும் கேள்வி கேளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : அறநிலையத் துறையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோமே. நாம் வைத்துக்கொண்டிருக்கும்போது, தெய்வ வழிபாடு முதலியவற்றையெல்லாம் ஊக்குவிக்கும் காரியங்கள் செய்யும்போது, கடவுள் படங்களை எடுக்கச்சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அறநிலையத் துறை என்பது ஏற்கெனவே இருக்கின்ற ஆலயங்களின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுவதற்கும் நிதிகள் நல்ல முறையில் செலவழிக்கப்படுவதற்கும், உபரி நிதியை வேறுபல நல்ல காரியங் களுக்குப் பயன்படுத்துவதற்கும் அந்தத் துறை இன்றைக்கு அதனுடைய பணியை நடத்திவருகிறது. அதற்கும் அலுவலகங் களில் படங்களை மாட்டுவதற்கும் சம்பந்தம் இல்லை. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆணை பிறப்பிக்கப் பட்டது பற்றி சொன்னார்கள். ஒரே அலுவலகத்தில் இரண்டு மூன்று சமயங்களைச் சார்ந்தவர்கள்—சைவ சமயத்தைச் சார்ந்தவர்களும் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களும்—இருக்கக் கூடும். அவர்கள் அவரவர்களுக்குரிய படங்களை மாட்டி வைக்கக் கூடும். அதன் காரணமாக ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகள் எழக்கூடும். அது நம்முடைய அரசு அலுவலகங்களுக்குரியதாக அமையாது என்பதால் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. யாருடைய மனத்தையும் புண்படுத்துவதற்காக அல்ல. எந்த அரசு அலுவலரும் அவர் தம்முடைய மனத்திலே கொண்டிருக்கிற தெய்வத்தை வழிபட அவர்களுக்கு நிச்சயமாக உரிமை உண்டு. அந்த உரிமையில் அரசு தலையிடுவதற்குத் தயாராக இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, 1967-க்குப் பிறகு தான் வள்ளுவரையும் அவர் இயற்றிய குறளையும் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு பிறந்தது. எனவே, அறியாத பாமர மக்களும் தெரிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் வள்ளு வருடைய படத்தை இலவசமாகப் போட்டு பொதுமக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1967-க்குப் பிறகுதான் வள்ளுவரைத் தெரியும் என்று வாதிப்பது முறை யல்ல. அதற்கு முன்பே வள்ளுவரைப் பற்றியும் அவர் யாத்த குறட்பாக்களும் நாட்டு மக்களிடையே எடுத்துச்சொல்லப்பட்டிருக் கின்றன. ஆனால், பரவலாகவும் விரிவாகவும் வள்ளுவத்தைப் பரப்பும் முயற்சியும் வள்ளுவர் படங்கள் எல்லா இடங்களிலும் இருக்கவேண்டும் என்ற முயற்சியும் இந்த அரசு பொறுப்பு ஏற்ற

1975 ஏப்ரல் 7]

பிறகு பரவலாக நடைபெறவேண்டும் என்ற அந்த பணியைச் செய்து முடித்திருக்கிறது. அந்த வகையில் நாம் தொடர்ந்து அந்தக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். இலவசமாக வழங்கத் தேவையில்லை. இலவசமாக வழங்கித்தான் வள்ளுவத்தைப் பரப்ப வேண்டும் என்ற நிலை தமிழகத்தில் உருவாகக் கூடாது. ஒவ்வொரு தமிழரும் அக்கறையோடு, அவர்கள் அதற்காக எவ்வளவு விலையானாலும் படங்களை வாங்கி தங்கள் இல்லங்களில் வைப்பதற்கான அந்த ஊக்கம் ஒவ்வொரு தமிழருடைய உள்ளத்திலும் இருந்திடவேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, முன்பு அரசுப் பேருந்துகளில் வள்ளுவர் படத்தை வைத்திருந்தார்கள். இப்பொழுது அது பரவலாக பல வண்டிகளில் இல்லாமல் இருக்கிறது. இதை மறுமுறையும் எல்லா வண்டிகளிலும் வைக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ? அல்லது, இதைக் கைவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் ஏற்கெனவே ஆயிரக்கணக்கான வண்டிகளில் வள்ளுவர் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சில வண்டிகளில் இல்லையென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட வண்டிகளிலும் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். கைவிடுவதற்கான உத்தேசம் எதும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வள்ளுவரை 1967-க்கு முன்னாலே தமிழ்நாட்டிற்குத் தெரியும் என்று சொன்னாலும் அவருடைய உருவத்தை வெவ்வேறு விதமாகச் சித்தரித்திருந்தார்கள். அவர் நமக்குத் தந்த திருக்குறளைப் பார்த்து நம்முடைய அரசுதான் வள்ளுவர் எப்படி இருந்திருப்பார் என்று கற்பனை செய்து அவருடைய கண் எப்படி இருந்திருக்கும் என்று சிந்தித்து ஒரு புதிய உருவத்தைத் தந்திருக்கிறது. அப்படிப்பட்ட வள்ளுவர் உருவத்தை நம்முடைய தமிழக அரசு இப்பொழுது நுங்கம்பாக்கத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய அரசு வருவதற்கு முன்பே வள்ளுவருடைய உருவப் படம் தயாராகிவிட்டது. இந்தப் படத்தை வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்தார்கள். அது அறிஞர் அண்ணா அவர்களும்

[1975 ஏப்ரல் 7

மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களும் அவருடைய இல்லத்திற்கு வரவேற்கப்பட்டு, அனைவரும் வள்ளுவர் பற்றிய கருத்துக்களைச் சொல்லி, அதற்குப் பிறகு தமிழ்நாட்டிலேயுள்ள தமிழ்ப் பெரும் புலவர்கள், அரசியல்வாதிகள், எதிர்க் கட்சித் தலைவர்கள், அப் போதிருந்த ஆளுங்கட்சியினர் அனைவருமே சேர்ந்து ஒத்துக் கொண்ட ஒரு உருவம்தான் இங்கே வைக்கப்பட்டிருக்கிற உருவம். இந்த அவையிலுள்ள உருவம் கூட திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது வைக்கப்பட்ட உருவமாகும். நான் தான் கேள்விகேட்டேன். திருவள்ளுவருடைய திரு உருவப்படம் இந்த அவையில் வைக்கப்பட வேண்டுமென்று கேட் டேன். உடனே, அவர் உறுப்பினர் கருணாநிதியினுடைய செலவில் வைப்பதாக இருந்தால் நாங்கள் தயார் என்று சொன்னார்கள். நான் உடனடியாக எழுந்து, என்னுடைய செலவில் வைக்கத் தயார் என்று சொன்னேன். பிறகு அவர்கள் வேண்டாம், வேண்டாம் நாங்களே வைக்கிறோம் என்று ஒத்துக்கொண்டு, இந்த அவையில் வைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சுப்பராயன் அவர்கள் மத்தியில் தபால் துறை அமைச்சராக இருந்தபொழுது, தபால் தலையில் வெளியிட திருவள்ளுவருடைய படம் கேட்கப்பட்டு, அப் பொழுது வேணுகோபால் சர்மா வரைந்து கொடுத்தது இந்தப் படம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரசு அலுவலகங்களில் இன்னின்னாருடைய படங்களைத்தான் வைக்க வேண்டுமென்பதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா? இன்னும் பல அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் இல்லையே, அங்கெல்லாம் அவருடைய படம் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இன்னின் னாருடைய படங்கள்தான் வைக்கப்பட வேண்டுமென்ற வகையிலே இல்லை. இன்னின்னாருடைய படங்களைத்தான் வைக்கவேண்டு மென்பதில் சில வேறுபாடான கருத்துக்கள் உருவாகக்கூடாது என்பதற்காக ஏற்கனவே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருப்பதால் பயனில்லை.

1975 ஏப்ரல் 7]

திருவள்ளுவர் படத்தைப் பொறுத்தவரை, நிதி வசதிக்கேற்ப, வைக்கலாம் என்று துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது, ஆணை பிறப்பிக்கப்படவில்லை. அதைத்தான் சொன்னேன், இவையெல்லாம் உணர்ச்சியின் அடிப்படையிலே செய்யப்படுகின்ற காரியங்கள். அவர்கள் செய்வார்களென்று நம்புகிறேன்.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசினுடைய கொள்கை சாதியினுடைய பெயரிலும், கடவுளின் பெயரிலும், மதத்தின் பெயரிலும், ஆகமத்தின் பேரிலும், இதிகாசத்தின் பெயரிலும் சமுதாயம் சீர்கேடடைந்திருந்தது என்பதாகும். அதன் விளைவாகத்தான் கடவுள் பேரில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றை எதிர்த்த தேசியத் தலைவர்களாக இருந்தவர்கள், நல்ல அறிவாளிகள், சமுதாயத்தை மேம்பாட்டுக்குக் கொண்டு வந்த பல பெரியார்களுடைய உருவங்களை, அலுவலகங்களிலே வைக்க அரசு ஆக்கம் அளிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தேசியத் தலைவர்களை யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், இதே தேசியத் தலைவர்கள் கூட, இங்கே படமாக இருக்கிற இராஜாஜி— போன்றவர்கள் எல்லாம்—அவர்களும்—இராமனை வணங்கி வந்தார்கள்—ஒரு கடவுளை வணங்கிக் கொண்டிருந்தார்கள். அதை அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வளர்த்துக் கொண்டே போனால் பிரச்னை வேறு விதமாக இருக்கும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, பயணிகள் விடுதிகளிலும் மற்ற விடுதிகளிலும் திருவள்ளுவர் படம் வைத்து, குறள் மட்டும் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தக் குறளுக்கு விளக்கம் எழுதி வைக்கவில்லை. ஆகவே திருவள்ளுவர் படத்தின் கீழ் குறளை எழுதுவதோடு, அக்குறளுக்கு விளக்கம் சேர்த்து எழுதிவைக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பயணிகள் விடுதிகளிலே வைக்கப்படுகின்ற படத்தின்கீழ் எழுதப்பட்டுள்ள குறளுக்கு விளக்கம் எழுதப்படவில்லையென்று சொன்னார்கள். விளக்கம் எழுதப்பட்டிருந்தால்தான் அதைப் படிக்க மாட்டார்கள். விளக்கம் எழுதப்படாமலிருந்தால்தான் பக்கத்திலேயிருப்பவர்களை விளக்கம் கேட்டார்கள். பக்கத்திலே

யிருப்பவர்கள் விளக்கம் சொல்வதன்மூலம் அவர்கள் ஒரு முறை அந்தக் கருத்தை மனதிலே பதிய வைத்துக்கொள்வார்கள். விளக்கம் கேட்பவர்கள் காது வழியே பாய்ந்து நெஞ்சிலே பதியவும் வாய்ப்பிருக்கும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திருவள்ளுவருடைய குறள்களை, மக்கள், இன்னும் பலபேரும் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு ஜில்லா தலைநகரிலும் வள்ளுவர் கூடம் என்று அமைத்து, வள்ளுவர் குறள்களை அங்கே வைத்து, மக்கள் பார்வைக்கும், மக்கள் படிப்பதற்குமான வாய்ப்பை ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திலும் ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்பொழுது மாநிலத்தினுடைய தலைநகரமான, சென்னை மாநகரத்தில் வள்ளுவர் கோட்டம் என்ற பெரிய கோட்டம் அமைக்கப்படுகிறது. அது அமைக்கப்பட்ட பிறகு, மாவட்ட அளவிலே அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியுமா என்று யோசிக்கலாம். ஆனால், இந்தக் கூடத்தைப் போல் அங்கேயெல்லாம் அமைக்க முடியாது. மாவட்டத் தலைநகரங்களில், ஏன் வட்டார அலுவலகங்களில்கூட, திருவள்ளுவரைப் பற்றி படிப்பகங்கள், நூலகங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு திருவள்ளுவருடைய கருத்துக்கள் பரவலாக பரப்பப்படுகின்ற பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இதை அரசு சார்பாக மட்டுமல்ல, தனிப்பட்ட புலவர்கள், புலவர்களால் அமைக்கப்பட்ட கழகங்களும் செய்து வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, வள்ளுவர் படம் வரையப்பட்டதையும், வள்ளுவர் சிலை வைக்கப்பட்டதையும் எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்துதான் படம் ஒப்புக்கொள்ளப்பட்டது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அலுவலகங்களிலும், பணியாளர் ஓய்வு விடுதிகளிலும் நாங்கள் எல்லாம் போகும்பொழுது வள்ளுவர் படத்தைப் பார்க்கிறோம். அந்த வள்ளுவர் படங்களை இப்பொழுது தான் நாங்கள் பார்க்கிறோம். இப்படி படம் வைக்க வேண்டுமென்பது நமக்கு முன்பிருந்தே இருந்து வருகிறதா ? அல்லது நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படி திருவள்ளுவர் படத்தை வைத்துக் குறளைப் பொறிக்கவேண்டுமென்ற விதி, சட்டம் கொண்டு வரப்பட்டதா என்பதையறிய விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, வள்ளுவர் படம் எழுதப்பட்ட காலத்தைத்தான் சொன்னேன். நண்பர் வீராசாமி அவர்கள் 1967-க்குப் பிறகுதான் வள்ளுவர் படம் தயாரிக்கப்பட்டது என்று சொன்னார். அப்படி இல்லை, அதற்கு முன்பே அந்தப் படம் தயாரிக்கப்பட்டது என்று சொன்னேன். தலைவர் அவர்களும், ஸ்டாம்ப் போடுவதற்காக எழுதிக் கேட்டபொழுது, இதை அந்த ஓவியர் தீட்டினார் என்று சொன்னார். ஆனால், தமிழ் நாட்டிலே பரவலாகப் பயணிகள் விடுதிகளில், பேருந்துகளில், அரசு அலுவலகங்களில் இந்தப் படம் வைக்கப்படுவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்குவந்தபிறகுதான் திட்டம் உருவாயிற்று. இப்பொழுது திருப்தியாக இருக்கும் இராஜாவுக்கு என்று நினைக்கிறேன்.

தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.

* 562 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் பிறந்த இல்லத்தை அரசு மேற்கொண்டு, அதனை நினைவுச் சின்னமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் பிறந்த இல்லத்தை அரசு மேற்கொண்டு, அதனை நினைவுச் சின்னமாக ஆக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

* 563 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் தந்தை பெரியார் அவர்களின் சிலையினை வைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த இடத்தில் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை நகரில் அண்ணா சாலையிலே பெரியார் சிலை நிறுவப்பட்டு விட்டதால், அரசின் சார்பில் பெரியார் சிலை நிறுவ தற்பொழுது எந்த உத்தேசமும் இல்லை.

[1975 ஏப்ரல் 7

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஈரோட்டில், தந்தை பெரியார் அவர்கள் பிறந்த வீட்டை அரசு மேற்கொண்டு, அதை நினைவுச் சின்னமாக ஆக்குகின்ற நல்ல செய்தியினை அறிகின்ற போது மெத்த மகிழ்ச்சி அடைகின்றோம். அதைப் போலவே நினைவுச்சின்னம் அமைக்கப்படுகின்ற தந்தை பெரியார் இல்லத்தில், அவர்கள் இருக்கின்ற வரையில் தமிழகத்திற்குத் தந்துவிட்டுப் போன சிறப்பான சொற்செல்வங்களையும் அதைப் போலவே எழுத்துச் செல்வங்களையும் அவர்கள் கையாண்ட பொருள்களையும் அங்கே வைத்து, வருங்காலச் சமுதாயத்தினர், தமிழ்ச் சமுதாயத்தினர், அவற்றைப் பார்த்து, எண்ணி, அவர் வழி நடக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஈரோட்டில் நாம் இப்பொழுது நினைவுச் சின்னமாக ஆக்கியிருக்கின்ற அந்த இடம் பெரியார் அவர்கள் பிறந்த இடமாகும். அது மாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஈரோட்டிலே பெரியார் அவர்களோடு இருந்த குடியரசு அலுவலகத்தில் பணியாற்றிய நேரத்தில், அவர்களும் வாழ்ந்த இடமாகும். ஆகவே, இருவருடைய அடையாளமாக அந்த இடத்திற்குப் பெரியார்-அண்ணா நினைவு இல்லம் என்கின்ற பெயர் வைக்க தீர்மானித்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா கேட்டதற்கிணங்க, நான் சொல்லவேண்டுமேயானால், அந்த இல்லத்தைப் பராமரிக்கின்ற செலவை நம்முடைய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த இல்லத்திலே செய்யப்படவேண்டிய காரியங்களுக்கான செலவையும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த இல்லத்தினுடைய மதிப்பு சுமார் ரூ. 76,000 என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால், அந்த இல்லத்தைத் திருமதி மணியம்மையார் அவர்கள் அரசுக்கு இலவசமாகவே தந்து விடுகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதை அரசு நன்றியுணர்ச்சியோடு பெற்றுக்கொள்கிறது. ரூ. 93,000 அளவுக்குப் பெரியாருடைய சிலையொன்றும், பகுத்தறிவு நூல்கள், மற்றும் பகுத்தறிவுக் கருத்துக்கள் வைக்க, ஒளி ஏற்பாடு, இல்லத்தைப் புதுப்பித்துச் சீர்செய்ய ரூ. 25,000 ஆக, ரூ. 1,18,000-க்கான செலவை அரசு அதற்காக ஏற்றுக் கொண்டிருக்கிறது. பெரியார் அவர்கள் பயன்படுத்திய வீல் சேர், மூக்குக் கண்ணாடி, கறுப்பு

1975 ஏப்ரல் 7]

உடை, பெரியார் அவர்கள் பயன்படுத்திய நாற்காலி, கட்டில், பேனா, பலகை, லென்ஸ் ஆகிய பொருள்களும் அங்கே வைக்கப் படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பெரியார் தேசிய இயக்கத்திலே இருந்த காரணத்தினாலே இந்தியா பூராவுமே அவரை ஈரோட்டு நாயக்கர் என்றுதான் அழைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே அவருக்கு ஈரோட்டிலே நினைவுச் சின்னம் அவர்களுக்கு அமைப்பது சாலச் சிறந்ததுதான். ஆனால் அவருடைய கருத்துக்கள் தெரிவித்துள்ள அறிவுரைகள் எல்லாம் இப்போது தமிழிலேதான் அவருடைய பிரசங்கங்கள் பூராவும் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன, அந்தப் புத்தகங்களையெல்லாம் ஆங்கிலத்திலே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அது மட்டுமல்ல, வைக்கத்திலே அவர் சத்தியாக்கிரகம் நடந்தபோது என்ன நடந்தது என்று அவர் சாவதற்கு 6 மாதத்திற்கு முன்னாலே தான் ரேடியோவிலே கேள்வி பதில் என்ற முறையிலே பல விஷயங்கள் சொன்னார்கள். அதிலேயும் உள்ள விஷயங்களை டேப் ரிக்கார்டு எடுத்து வெளியிடுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போதுதான் பெரியார் பிறந்த இல்லத்தை பெரியார் அண்ணா இல்லமாக மாற்றி பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் அந்த இல்லம் மூலமாக வெளியிட முயற்சி செய்து வருகிறோம். திரு. கே. டி. கே. அவர்கள் தெரிவித்த யோசனைகள் நல்ல யோசனைகள், அவைகளை யெல்லாம் படிப்படியாக செயல்படுத்த அரசு முயற்சி செய்யும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, பகுத்தறிவுச் சிங்கமான தந்தை பெரியார் அவர்களுக்கு மாநில அரசு அமைக்கிற நினைவுச் சின்னத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அறியக்கூடிய முறையில் மத்திய அரசு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருந்தது, அதைப்பற்றி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்ற ஆண்டு அதைப் பற்றி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினேன். இந்த ஆண்டு காலம் போதுமானதாய் இல்லை, மீண்டும் நினைவுபடுத்துங்கள்